# செங்கல்பட்டு நகராட்சி

## <u>அவசரக் கூட்டம்</u>

**<u>2019ம் ஆண்டு மார்ச் மாதம் 8 ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.</u>**

---

பொருள் –1

தமிழ்நாடு அரசிதழ் எண். 43 பகுதி–3 பிரிவு 1(எ) நாள் 4.2.2019ல் உள்ளாட்சிகளில் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 ஆணை வெளியிடப்பட்டுள்ளதை நடைமுறைப்படுத்த மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக கு.ப்பு–

பதிவு செய்யலாம்.

பொருள் –2

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் விதி 14ல் திட்ட அனுமதி அல்லது கட்டிட அனுமதி 5 ஆண்டுகள் மற்றும் ஒரு முறை கால நீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே முதலில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரிய விண்ணப்பதாரர்களுக்கு கட்டிட அனுமதி கட்டணம் மற்றும் திட்ட அனுமதி கட்டணம் ஆகியவற்றினை ஏற்கெனவே வசூலிக்கும் தொகையிலிருந்து கூடுதலாக 15 சதவீதம் வசூலிக்கவும், மேலும் ஒரு முறை கால நீட்டிப்பு 3 ஆண்டுகள் வழங்க விண்ணப்பிக்கும் நபர்களுக்கு நடப்பில் முதலில் செலுத்திய கட்டண விகிதம் முழுவதும் செலுத்தப்பட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

தற்போது கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி காலம் மூன்று ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தி உள்ளதால் முதலில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரிய விண்ணப்பதாரர்களுக்கு ஏற்கெனவே வசூலிக்கும் தொகையில் 15 சதவீதம் கூடுதலாக வசூல் செய்யவும் மேலும் ஒரு முறை கால நீட்டிப்பு 3 ஆண்டுகள் வழங்க விண்ணப்பிக்கும் நபர்களுக்கு நடப்பில் முதலில் செலுத்திய கட்டணம் விகிதம் முழுவதும் செலுத்த மன்றம் முடிவு செய்யலாம்.

பொருள் – 3

செங்கல்பட்டு நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிகள் ஒப்பந்த அடிப்படையில் ( வார்டு 24 முதல் 33 வரை) Relyon Faculty Service நிறுவனத்தின் மூலம் நடைபெற்று வரும் நிலையில் தற்போது அவர்களது ஒப்பந்தத்தினை மேலும் ஒரு வருடம் நீடித்து வழங்கவும் இதில் பின்வருமாறு மாற்றங்களை செய்யவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறைகள் கே.டி.எஸ் எண்.26729/2017/பி5 நாள் 20.12.2017ன்படி தேவைப்படும் துப்புரவு பணியினை தனியார் மயம் ஒப்படைக்கப்பட்டதை கால நீடிப்பு (3 வருடத்திற்கு) செய்ய வேண்டிய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. ஏற்கனவே Relyon Faculty Service தனியாரிடம் 1.3.2018 முதல் 28.2.2019 வரை 48 பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி செய்ய ஒப்படைக்கப்பட்டது. ந.க.எண். 2454/2017/எச்1 தற்போது பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியின் முக்கியம் கருதியும், தேர்தல் விதிமுறைகள் நெருங்குவதாலும் இந் நிறுவனத்திற்கு மேலும் ஒரு வருடம் துப்புரவு பணியினை 1.3.2019 முதல் 29.2.2020 வரை நீடிப்பு செய்யவும், ஏற்கனவே நகர மன்ற தீர்மான எண். 359 நாள் 22.3.2018ல் அனுமதி பெறப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்தபுள்ளி விகிதத்தில் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 2018ம் ஆண்டு நிரந்தர பணியாளர்கள் 113 நபர் இருந்தனர். தற்போது 105 நபர்கள் மட்டுமே உள்ளதால் தனியாரிடம் (48 + 8 = 56) 56 பணியாளர்களை நியமிக்கவும் இந்த தோராய செலவினமாக 56 X 414 -90 X 366 = 85,03,790/– தோராயமாக ரூ.86.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ஆட்கள் ஊதியம் ,ESI. EPF. Uniform and safety equipment. மற்றும் தளவாட பொருட்கள் உட்பட)

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) பொது சுகாதாரம் சம்மந்தமாக இருப்பதால் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் – 4

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு எதிர்வரும் கோடைகாலத்தை கருத்தில் கொண்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் பணிக்கு ரூ. 10.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு 6.3.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி தனியார் லாரி மூலம் குடிநீர் வழங்கும் பணி. | ரூ.10.00 இலட்சம் | திரு ஜெகதீஷ் 0.60 சதவீதம் குறைவு |
| 2 | | | திரு கங்காதரன் 2.97 சதவீதம் அதிகம். |

குறைவாக ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு ஜெகதீஷ் அவர்களின் ஒப்பந்தபுள்ளி ஏற்றிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 5

செங்கல்பட்டு நகராட்சியில் 2018–19ம் நிதியாண்டில் பொது நிதியின் கீழ் பின்வரும் பணிகள் செய்ய 6.3.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளை நகர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலகத்தில் சி.சி.டி.வி மற்றும் கேமரா அமைக்கும் பணி. | ரூ.4.00 இலட்சம் | திரு கே. வெங்கடேசலு 0.03 சதவீதம் குறைவு |
| 2 | | | திரு இ. சந்திரன் 0.50 சதவீதம் அதிகம். |

அலுவலக குறிப்பு–

மேற்கண்ட வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

பொருள் – 6

செங்கல்பட்டு நகராட்சியில் 2018–19ம் நிதியாண்டில் குடிநீர் நிதியின் கீழ் பின்வரும் பணிகள் செய்ய 6.3.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | 2018–19ம் ஆண்டு மாமண்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் புதியதாக நீர் ஆதார கிணற்றுக்கு பைப்லைன் மற்றும் மோட்டார் அமைக்கும் பணி | ரூ.23.00 இலட்சம் | திருவா SMK எண்டர்பிரைசஸ் 5.01 சதவீதம் அதிகம் |
| | | | திருவா குமரன் எண்டர்பிரைசஸ் 1.25 சதவீதம் குறைவு |

| | | | |
|---|---|---|---|
| 2 | மாமண்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் புதியதாக நீர் ஆதார கிணறு அமைத்து மோட்டார் மற்றும் பைப்லைன் அமைக்கும் பணி. | ரூ.18.00 இலட்சம் | திருவா குமரன் எண்டர்பிரைசஸ் 0.30 சதவீதம் குறைவு |
| | | | திருவா SMK எண்டர்பிரைசஸ் 2.77 சதவீதம் அதிகம் |

அலுவலக குறிப்பு–

மேற்கண்ட வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்யினை மன்றம் ஏற்கலாம்.

## பொருள் – 7

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி பள்ளிகளில் (குண்டூர் நகராட்சி பள்ளி, அனுமந்தபுத்தேரி நகராட்சி பள்ளி, மற்றும் வடமலை பள்ளி, அண்ணா நகராட்சி மேல்நிலை பள்ளிக்கு கல்வி நிதியின் கீழ் பாராளுமன்ற தேர்தலுக்காக பள்ளி வளாகத்தில் மின்சார பணிகள் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு 7.3.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி கல்வி நிதியின் கீழ் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலுக்காக குண்டூர் நகராட்சி பள்ளி, அனுமந்தபுத்தேரி நகராட்சி பள்ளி, வடமலை நகராட்சி பள்ளி, மற்றும் அறிஞர் அண்ணா நகராட்சி பள்ளிகளில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள். | ரூ.5.00 இலட்சம் | திரு கங்காதரன், 0.07 சதவீதம் குறைவு |
| | | | திருவா விமலாபாய் கண்ஷரக்சன் 0.29 சதவீதம் அதிகம். |

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் – 8

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட தூக்குமரகுட்டை உரகிடங்கு பகுதியில் உள்ள Pyrolysis Unit க்கு அணுகுசாலை அமைக்கவும், புகையினை போக்க பைப்கள் மற்றும் தீயணைப்பு சாதனங்கள் பொருத்தவும், ரூ.5.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு அப் பணிக்கு 7.3.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட உரகிடங்கு பகுதியில் Pyrolysis Unit க்கு அணுகு சாலை அமைக்கவும், தீயணைப்பு கருவி மற்றும் வாகனங்கள் சுத்தப் படுத்தும் சிமெண்ட் தரைதளம் அமைக்கும் பணி. | ரூ.5.50 இலட்சம் | திரு கே. வெங்கடேசலு 0.10 சதவீதம் குறைவு |
| | | | திரு இ. சந்திரன், 0.15 சதவீதம் அதிகம். |

குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு கே. வெங்கடேசலு அவர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தூய்மை இந்தியா திட்ட பணியின் அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மேற்கொண்ட நடவடிக்கைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் – 9

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வீட்டு குடிநீர் இணைப்புகள் கமற்றும் பாதாள சாக்கடை வீட்டு இணைப்பு வழங்குதல் குறித்த அரசாணை (நிலை) எண். 126 நாள் 28.11.2018 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந2) துறை ஆணையிடப்பட்டுமுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

பதிவு செய்யலாம்.

பொருள் – 10

செங்கல்பட்டு நகராட்சியில் 2018–19ம் நிதியாண்டில் குடிநீர் நிதியில் கீழ் பின்வரும் பணிகள் செய்ய 6.3.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளை நகர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | மாமண்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் மின் மோட்டார், ஸ்டார்டர், பைப்லைன், கேபிள் | ரூ.9.80 இலட்சம் | திரு ராஜகோபாலன்,செங்கல்பட்டு 0.17 சதவீதம் குறைவு |

| | | | |
|---|---|---|---|
| | பராமரிக்கும் பணி. | | திருவா அப்பல்லோ எண்டர்பிரைசஸ், மறைமலை நகர் 0.24 சதவீதம் அதிகம். |
| 2 | பழவேலி தலைமை நீரேற்று நிலையத்தில் ரேடியோ மலை, பாசி தெரு, தட்டான்மலை திட்டம் ஆகியவற்றின் மின்மோட்டார்கள், ஸ்டார்டர்கள், கேபிள்கள் பைப்லைன் பழுது நீக்கும் பணி. | ரூ.9.50 இலட்சம் | திருவா ஆனந்த் எண்டர்பிரைசஸ் 0.35 சதவீதம் அதிகம் |
| | | | திருவா அப்பல்லோ எண்டர்பிரைசஸ், மறைமலை நகர் 0.02 சதவீதம் குறைவு. |

அலுவலக குறிப்பு–

மேற்கண்ட வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

பொருள் – 11

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான பகதியில் உள்ள க.எண். 2ஏ/2 ராஜேஸ்வரி வேதாசலம் தெருவில் அமைந்துள்ள கட்டிடத்தின் சொத்துவரி விதிப்பு எண். 018.032/00577 திரு வி.பி.எ. இராஜேந்திரபாபு என்பவர் பெயரில் உள்ளது. மேற்படி விரிவிதிப்பு 2017–18 முதல் அரையாண்டு முதல் புதிய கட்டிடம் மற்றும் கூடுதல் கட்டுமானம் அடிப்படையில் ( un Assessment and under assessment ) இந் நகராட்சி மூலம் வரிவிதிப்பு செய்யப்பட்டதை எதிர்த்து மேற்படி விதிப்புதாரர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண். டபள்யு,.பி. எண். 29768/2018 அதனை தொடர்ந்து மனுதாரர் மேற்படி சொத்துவரி தொகையில் 25 சதவீதம் தொகை செலுத்துவதற்காக வரைவோலை கடிதம் மூலம் சமர்ப்பித்திருந்தார். அதற்கான சட்ட கருத்துரு இந் நகராட்சி உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு பி. சீனிவாஸ், அவர்களுக்கு வழங்குவதற்கான சட்டகருத்துரு தொகை ரூ.15,000/–ஐ அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.2558/2018/அ1)

பொருள் – 12

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2018 ஜுன் மாதம் 5ம் தேதி தமிழ்நாடு சட்ட மன்ற பேரவையில் 110 விதிகளின் கீழ் தமிழ்நாடு மாநிலமானது ஒரு முறையே பயன்படுத்தப்பட்டு தூக்கி வீசப்படும் நெகிழியை தடை செய்யும் பொருட்டு 1986ஆம் ஆண்டு சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டத்தின்படி (மையச் சட்டம் 29/1986) 2019 ஜனவரி 1ம் தேதியில் இருந்து நடைமுறையில் பயன்படுத்தப்படும் நெகிழிப் பொருட்களை உற்பத்தி செய்வதை, போக்குவரத்து செய்வதை,

சேமித்து வைப்பதை, பகிர்ந்தளிப்பதை மற்றும் அறிவிப்பினை வெளியிட்டார்கள். மேலே குறிப்பிட்ட நெகிழிப் பொருட்களை தடை செய்வது தொடர்பான வகை முறைகளை மீறும் போது பணத்தண்டம் (அபராதம்) விதிப்பதற்கு ஏதுவாக 2019ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் (2ஆம் திருத்தம்) தின் கீழ் உப விதிகள் ஏற்படுத்தி அதன்படி செயல்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இவ்விதியினை நடைமுறைப்படுத்த காஞ்சிபுரம் மாவட்ட அரசிதழில் வெளியிடவும், மற்றும் செய்திதாள் விளம்பரம் மற்றும் இதர செலவினத்திற்கு ( தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

அனுமதி அளிக்கலாம்.

பொருள் – 13

இந் நகராடசி பணி ஒப்பந்ததாராக உள்ள திரு கே.ராஜகோபாலன் என்பவர் இந் நகராட்சிக்குட்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொண்டார். குடிநீர் பைப்லைன் அமைக்கும் பணிக்கு அவருக்கு டைக்கப்பெற்றது. மேற்படி பணிக்காக உத்திரவு வழங்கப்பட்டு பணியும்முடிவு பெற்றது. மேற்படி பணியில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணிதரக்காப்பு தொகையினை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

1) ரூ.1,05,789/– 2) ரூ.14,748/– ஆக மொத்தம் ரூ.1,20,537/–

மேலும் குடிநீர் பைப்லைன் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுவிட்டதாக பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் குறிப்பின்படி தொகை திரும்ப வழங்கவும் மேற்படி பணியில் 2015–16ம் ஆண்டு தணிக்கை தடை ஏதுமில்லை என தணிக்கை எழுத்தர் தனது குறிப்பில் தெரிவித்துள்ளதால் மேற்படி மனுதாரர் செலுத்தியுள்ள பணிதரக்காப்பு தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

பொருள் – 14

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 110ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 11.2.2019 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் கிராமப்புற மற்றும் நகர்புற ஏழைகளுக்கு குறிப்பாக விவசாய தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏழை தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ஒரு முறை சிறப்பு நிதியுதவி பி.பி.எல் படிவம் கணக்கெடுக்கவும், கணிணியில் பதிவேற்றம் செய்யவும்

விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்யவும், மேலும் அதில் ஈடுபடும் பணியாளர்களுக்கு உணவு வழங்க மகளிர் சுய உதவிக்குழுவிற்கு அளிக்க விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளன.

**விண்ணப்பம் மின் நகல் எடுக்க–**

| | | |
|---|---|---|
| 1) | ஸ்ரீ மாணிக்க வீணை மகளர் சுய உதவி குழு | = ரூ.50,000/– |
| 2) | நம்பிக்கை மகளிர் சுய உதவிக்குழு | = ரூ.52,500/– |
| 3) | மயில் மகளில் சுய உதவிக்குழு | = ரூ.75,700/– |

**பணியாளர்களுக்கு உணவு வழங்க–**

| | | காலை | மதியம் | இரவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1) | செந்தமிழ் மகளிர் சுய உதவிக்குழு | ரூ.50/– | ரூ,.100/– | ரூ.50/– | ரூ.200/– |
| 2) | மயில் மகளிர் சுய உதவிக்குழு | ரூ.50/– | ரூ.100/– | ரூ.60/– | ரூ.210/– |
| 3) | அட்சயம் மளிர் சுய உதவிக்குழு | ரூ.55/– | ரூ.100/– | ரூ.50/– | ரூ.205/– |

Data Collection செய்ய ரூ.2/– ஒரு விண்ணபத்திற்கு ஆக ரூ.17,000/–

Data வை கணிணியில் பதிவேற்றம் செய்ய ரூ.2/– ஒரு விண்ணபத்திற்கு ஆக ரூ.17,000/–

இதர செலவுகள் ( stationeries ) ரூ.6500/–

மேற்படியான விலைப்புள்ளிகளின் விண்ணப்பம் பதிவேற்றம் செய்ய மாணிக்க வீணை மகளிர் சுய உதவிக்குழு விலைப்புள்ளி குறைவாக உள்ளது. மேலும் பணியாளர்களுக்கு உணவு வழங்க ஸ்ரீ செந்தமிழ் சுய உதவிக்குழு விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் மேற்கண்ட இரண்டு குழுக்களை பயன்படுத்தி இப் பணியினை முடித்து அதற்கான தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இதர செலவுகளுக்கு விலைச்சீட்டு ( Bill ) பெற்று நேரடியாக வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் – 15**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களின் 25.2.2019ஆம் தேதியிட்ட கடித ந.க.எண். 2288/2019/பி3 கடிதத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கொள்கை அளவிலான நடவடிக்கைகளை ( SWM Policy ) மேற்கொள்ளவும் இது குறித்து காஞ்சிபுரம் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும் மற்றும் தினசரி பத்திக்கையில் விளம்பரம் படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) மேற்படி நிகழிவிற்கான செலவின தோராய தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கலாம்.

**பொருள் –16**

செங்கல்பட்டு நகராட்சியில் 2018–19ம் ஆண்டுக்கு அலுவலக அன்றாடப்பணிக்கு தேவையான எழுது பொருள்கள் மற்றும் பதிவேடுகள் தேவையான உபகரணங்கள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் மற்றும் கூட்டுறவு சங்க நிறுவனங்களில் இருந்து அதற்கான ஒப்பந்தப்புள்ளி இருந்து வாங்கி கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி அளிக்கலாம்.தனிஅலுவலர்முன் அனுமதி பெற்றமேல் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம். (ந.க.எண்.2790/2018/பி1)

**பொருள் – 17**

இந் நகராட்சியில் 2018–19 ஆம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் பதிவேடுகள் சப்ளை செய்ய கூட்டுறவு அச்சகங்களில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் அதில் கீர்கண்ட இரண்டு கூட்டுறவு நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. இதனை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை | சங்குநகர் எழுது பொருள் அச்சகம், சென்னை–1 | வேதக்குளம் கூட்டுறவு சொசைட்டி லிட் சென்னை–59 |
|---|---|---|---|---|
| 1 | சிட்டா பதிவேடு | 1 | ரூ.667/– | ரூ.720/– |
| 2 | பி.ஆர் 200 பக்கம் | 1 | ரூ.294/– | ரூ.315/– |
| 3 | பி.ஆர் 100 பக்கம் | 1 | ரூ.252/– | ரூ.280/– |
| 4 | வருகை பதிவேடு | 1 | ரூ.126/– | ரூ.140/– |
| 5 | ரன்னிங் நோட் | 1 | ரூ.126/– | ரூ.140/– |
| 6 | வருகை பதிவேட்டின் சுருக்க பதிவேடு | 1 | ரூ.126/– | ரூ.140/– |
| 7 | முன்வைப்பு தொகை பதிவேடு(நிலுவை) | 1 | ரூ.375/– | ரூ.410/– |
| 8 | முன்வைப்பு தொகை பதிவேடு(நடப்பு) | 1 | ரூ.375/– | ரூ.410/– |
| 9 | வருங்கால வைப்பு நிதி பதிவேடு | 1 | ரூ.560/– | ரூ.650/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | கேஷ் புக் | 1 | ரூ.283/– | ரூ.310/– |
| 11 | வைப்பு தொகை டெபாசிட் பதிவேடு (நிலுவை) | 1 | ரூ.682/– | ரூ.770/– |
| 12 | வைப்பு தொகை டெபாசிட் பதிவேடு (நடப்பு) | 1 | ரூ.682/– | ரூ.770/– |
| 13 | சொத்துவரி பெயர்மாற்ற படிவம் | 1 | ரூ.189/– | ரூ.220/– |
| 14 | கட்டிட உரிமையானை விண்ணப்பம் | 1 | ரூ.189/– | ரூ.220/– |
| 15 | D & O படிவம் | 1 | ரூ.189/– | ரூ.220/– |
| 16 | வருங்கால வைப்புநிதி வவுச்சர் | 1 | ரூ.189/– | ரூ.220/– |
| 17 | பைல் பேட் | 1 | ரூ.42/– | ரூ.48/– |
| 18 | ரேப்பர் தாள் | 1 | ரூ.7/– | ரூ.7.40 |
| 19 | காலிமனை வரி படிவம் | 1 | ரூ.3.04 | ரூ.3.40 |
| 20 | அக்கௌண்ட் பைல்பேட் | 1 | ரூ.90/– | ரூ.102/– |
| 21 | பெயர்மாற்றப் பதிவேடு | 1 | ரூ.252/– | ரூ.280/. |
| 22 | சொத்துவரி கேட்பு அறிப்பு | 1 | ரூ.3.04 | ரூ.3.40 |
| 23 | டெண்டர் பதிவேடு | 1 | ரூ.231/– | ரூ.260/– |
| 24 | அ–4 பேப்பர் ( 1 ரீம்) | 1 | ரூ.361/– | ரூ.380/– |
| 25 | குடிநீர் கட்டண கேட்பு அறிவிப்பு | 1 | ரூ.3.04 | ரூ.3.40 |

அலுவலக குறிப்பு–

1) மேற்படி வரப்பெற்ற 2 விலைப்புள்ளிகளில் குறைந்தவிலைப்புள்ளி கொடுத்துள்ள திருவா. சங்கு நகர் எழுது பொருள் கூட்டுறவு அச்சகம், சென்னை–1 அவர்களின் விலைப்புளி மன்றம் ஏற்கலாம்.

2)அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேற்படி படிவங்கள் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த திருவா.சங்குநகர் நிறுவனதின் மூலம் பெற்றுக் கொண்டதற்கு மன்றம் பின்னேற்ப்பு ஒப்புதல் வழங்கலாம்.

தனி அலுவலர்,
செங்கல்பட்டு நகராட்சி

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு அவர்களின் அறிவுறுத்தலின் பெயரில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வீடு வீடாக சென்று குப்பைகளை பெற பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி கிராமிய குழுக்கள் மூலம் பள்ளிகள் மற்றும் தெரு மனைகளில் நாடக நிகழ்ச்சி நடத்தி விளம்பரம் படுத்த நகர் மன்ற தீர்மானம் எண். 705 நாள் 31.1.2019ல் ரூ.1.00 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டதின்படி கீழ்கண்டுள்ள மூன்று கலைக்குழுக்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | கலைக்குழுவின் பெயர் | விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | சிவசக்தி கிராமிய கலைக்குழு நாள் ஒன்றுக்கு | ரூ.10,000/– |
| 2 | ஜெயா கலைக்குழு நாள் ஒன்றுக்கு | ரூ.11,000/– |
| 3 | விஜி கலைக்குழு நாள் ஒன்றுக்கு | ரூ.12,000/– |

மேற்படி மூன்று விலைப்புள்ளிகளில் சிவசக்தி கிராமிய கலைக்குழு விலைப்புள்ளி குறைவாக இருப்ந்ததால் இக் குழுவினை பயன்படுத்தி அன்னாருக்கு பணப்பயன் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.511/2019/எச்1)

# செங்கல்பட்டு நகராட்சி

**ந.க.எண்.1574/2018/எச்1** **நாள்.14.05.2019**

**மன்ற தீர்மான எண்.786 நாள்.08.032019**

**1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 306ன் படியும் 2019 ம் வருடத்திய பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் விதி 6(4) கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள் குறித்த அறிவிக்கை**

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)ல் பிரிவு 3,6 மற்றும் 25களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306ன் படி 2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் நெகிழி (Pastic) மொத்த விற்பனை, உற்பத்தி செயல், சேமித்து வைத்தல் விற்பனை, எடுத்துச் செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராத தொகை விதிக்கப்பட்டுள்ளதை கீழ்க்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்தலாம்.

- **(I)** **செயலாக்க அதிகாரி–** நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அமதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவார்.
- **(II)** **ஆய்வு நடத்தும் அதிகாரி–** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்பரவு பணி மேற்பார்வையாளர், துப்பரவு ஆய்வாளர், நகர் நல அலுவலர், மற்றும்ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.
- **(III)** **மேல்முறையீட்டு அலுவலார்–** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடுர்பான கருத்துகளில் மேல்முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.
- **(IV)** **தண்டனைகள் விதிக்கும் முறைகள்–** மேற்படி சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள் ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருள்களை பறிமுதல் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D & O)முதலியன தண்டனை முறைகள் மற்றும் சட்டப்படியான நடவடிக்கைகள்.

II (V) வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு–

1. மொத்த சேமிப்பாளர் / விநியோகிப்பாளர்
    a) 1 ச.அடி முதல் 500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
    b) 501 ச.அடி முதல் 1000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
    c) 1001 ச.அடி முதல் 1500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
    d) 1501 ச.அடி முதல் 2000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
    e) 2001 ம் அதற்கு மேல்.

III வணிக வளாகங்கள்–

a) பெரிய மற்றும் சிறிய துணிக்கடைகள்
b) பல்பொருள் அங்காடிகள் பெரியது
c) திரையரங்குகள்
d) அரசு மதுபானக்கடை, மதுபான விற்பனைக் கூடங்கள் (BARS) மனமகிழ்மன்றம் முதலான இதர இனங்கள்.
e) கல்வி நிறுவன வளாகங்கள்.
f) அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வளாகங்கள்.
g) திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள் முதலானவை.
h) பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள்.

**IV** மளிகைக் கடைகள், காய்கறிக்கடைகள், பழக்கடைகள், மருந்துக்கடைகள், உணவகங்கள், பழச்சாறு விற்பனைக் கடைகள், இறைச்சி மற்றும் மீன் கடைகள் முதலானவைகள்.

**V** சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோர கடைகாரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள்.

**II தண்டனைகள் விவரம்**

**பிரிவு 306 (28–எ) இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்.**

| வ. எ ண் | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1 | பயன்படுத்த கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடய நெகிழியை சேமித்தல் / வழங்குதல் / கொண்டு செல்லுதல் / விற்பனை செய்தல் மற்றும் / பகிர்ந்தளித்தல் | ரூ.25,000/– ரூபாய் இருப்த்தைந்தாயிரம் | ரூ.50,000/– ரூபாய் ஐம்பதாயிரம் | ரூ.1,00,000/– ரூபாய் ஒரு இலட்சம் |
| 2 | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்த கூடிய மற்றும் தூக்கி வீசப்படக் கூடிய நெகிழியை பயன்படுத்துல் மற்றும் பகிர்நதளித்தல். | ரூ.10,000/– ரூபாய் பத்தாயிரம். | ரூ.15,000/– ரூபாய் பதினைந்தாயிரம் | ரூ.25,000/– ரூபாய் இருப்த்தைந்தாயிரம் |
| 3 | மளிகைக் கடைகள் மற்றும் மருந்துக் கடைகள் போன்ற நடுத்தர வணி நிறுவனங்களில் பயன்படுத்த கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ரூ.1000/– ரூபாய் ஓராயிரம் | ரூ.2,000 ரூபாய் இரண்டாயிரம் | ரூ.5,000/– ரூபாய் ஐந்தாயிரம் |
| 4 | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தகூடிய மற்றும் தூக்கி நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ரூ.100/– ஒரு நூறு ரூபாய் | ரூ.200/– ரூபாய் இருநூறு | ரூ.500/– ரூபாய் ஐநூறு |

மேற்படி விதிகளில் கூறப்பட்டுள்ள நிர்வாக கட்டணங்களை விதித்தல், மற்றும் அவற்றிற்கான தொடர் நடவடிக்கைகள் குறித்து ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் எழுத்து மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ 30 நாட்களுக்குள் நகராட்சி அலுவலகத்தில் தெரிக்கலாம்.

செங்கல்பட்டு
2019 மே 14

(ஒம்)..........................
ஆணையாளர் (ம) தனி அலுவலர்
செங்கல்பட்டு நகராட்சி

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**அனுப்புநர்**
திரு ந. தட்சணாமூர்த்தி, பி.காம்.,
ஆணையர் ,
நகராட்சி அலுவலகம்,
செங்கல்பட்டு .

**பெறுநர்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு துறை,
காஞ்சிபுரம் மாவட்டம்,
காஞ்சிபுரம்.

ந.க.எண்.1574/2018/எச்1 நாள்.14.05.2019

அய்யா,

**பொருள்–** பொது சுகதாம் – செங்கல்பட்டு நகராட்சி – **1920** ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு **306**ன் படியும் **2019**ம் வருடத்திய பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் **2016**ன்விதி**6(4)** கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள் குறித்த அறிவிக்கை – தமிழ் நாளிதமிழ் விளம்பரம் செய்ய கோருதல் – தொடர்பாக.

**பார்வை–** நகர மன்றத்தீர்மான எண்.786 நாள்.08.03.2019

------

பார்வையில் கண்டுள்ள நகர மன்ற தீர்மானத்தின் படி செங்கல்பட்டு நகராட்சிக்குப்பட்ட பகுதியில் பிளாஸ்டிக் பொருட்களை முழுவதுமாக தடைசெய்ய வேண்டி, **1920** ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு **306**ன் படியும் **2019** ம் வருடத்திய பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் **2016**ன் விதி **6(4)** கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள் குறித்த அறிவிக்கை குறித்த விளம்பர அறிவிக்கையினை மாவட்ட அளவிலான ஏதேனும் ஒரு தமிழ் நாளிதழில் சிறிய அளவில் பிரசுரம் செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**ஆணையர்,**
**செங்கல்பட்டு நகராட்சி.**

**இணைப்பு**
தமிழ் விளம்பர அறிவிக்கை

**நகல் சமர்ப்பிக்கப்படுகிறது.**
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு மண்டலம்.

மாண்புமிகு முதலைச்சர் அவர்கள் 2018 ஜுன் 5–ம் நாளன்று தமிழ்நாடு சட்ட மன்ற பேரவையில் 110 விதிகளின் கீழ் தமிழ்நாடு மாநிலமானது பயன்படுத்தப்பட்டு வீசப்படும் நெகிழியை தடைசெய்யும் பொருட்டு 1986 ஆம் ஆண்டு சுற்றுச் சூழல் (பாதுகாப்புச்) சட்டத்தின்படி (மையச்சட்டம் 29/1986) 2019 ஜனவரி 1ல் இருந்து நடைமுறையில் பயன்படுத்தப்படும் நெகிழி பொருட்களை உற்பத்தி செய்வதை, போக்குவரத்து செய்வதை, சேமித்து வைத்தலை, பகிர்ந்தளித்தலை மற்றும் பயன்பாட்டினை தடை செய்து அறிவிப்பினை வெளியிட்டார்கள். இந்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் எண். எஸ்.ஒ.152 (இ) ன் உடன் இணைந்த மையச் சட்டம் 29/1986 பிரிவு 5 ன் படி அறிக்கை வெளியிட்டுள்ளது. எழுத்து மூலமாகவும், செயல் ரீதியாகவும் பயன்படுத்தப்படும் மற்றும் தூக்கி வீ.ச.படும் நெகிழி பொருட்களை தடை செய்வதை நிறைவேற்றும் பொருட்டு, மேலே குறிப்பிட்ட நெகிழி பொருட்களை தடை செய்வது தொடர்பாக வகைமுறைகளை மீறும் போது பணத் தண்டம் விதிப்பதற்கு ஏதுவாக 2019ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் கீழ் கீழ்க்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்தலாம்.